சீராக நிர்ணயித்து, தமிழகம் முழுமையும் அதை முழுமையாக அமுல்படுத்தி, நடைமுறைப்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.05

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழகத்திலே இருக்கின்ற கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரே சீரான கூலியை வழங்குவது சாத்தியமில்லை என்று நான் குறிப்பிட்டேன். ஆனால் கூட்டுறவுச் சங்கங்களில் இப்படி கூலி வேலை செய்து, நெசவுத் தொழில் செய்பவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எவ்விதப் பாகுபாடுமின்றி பருத்தி பட்டு கலந்து, ஜனதா ரகம் என்று இருக்கின்றதை நெசவு செய்யும் அனைத்து வகை நெசவுத் தொழிலாளர்களுக்கும் அவர்கள் பெற்றுவரும் அடிப்படைக் கூலியில் 10 சதவீதம் ஒரே சீரான அகவிலைப்படி வழங்க உத்தரவிட்டிருக்கிறார் என்ற தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 54, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

54—

பாவலர் பிறந்த வீட்டை நினைவகமாக்குதல்

*108290—*திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:*

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சதாவதானி செய்குத்தம்பி பாவலர் பிறந்த வீட்டை அரசு நினைவகமாக மாற்ற ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த 4¾ ஆண்டுகளிலே இந்தியாவிலே எந்த ஒரு முதல் மந்திரியும் சாதிக்க முடியாத சாதனைகளைப் படைத்துள்ளது நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலேதான். மாவட்டங்களைப் பிரிக்கும்போது மறைந்த தலைவர்களின் பெயர்களை வைப்பது, புலவர்கள் பிறந்த வீடுகளை நினைவுச் சின்னமாக்குவது,

மணிமண்டபம் கட்டுவது போன்ற நல்ல திட்டங்களைச் செய்துவரும் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே செய்குத்தம்பி பாவலர் அவர்களுடைய வீடு நினைவுச் சின்னமாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், கோட்டாறு இடலக்குடியில் செய்குத்தம்பி பாவலர் அவர்கள் பிறந்த வீட்டுக்கு அருகிலேயே 4 இலட்சம் ரூபாய் மதிப்பிலே ஒரு நினைவு மண்டபம் அரசு சார்பிலே அமைக்கப்பட்டு, அது 1987 ஆம் ஆண்டு திறக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அவருடைய நினைவு மண்டபம் கன்னியாகுமரி மாவட்டத்திலே அமைந்திருக்கின்ற காரணத்தாலே பிறிதொரு நினைவு இல்லத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 55, திரு. வி.பி.ஆர். ரமேஷ், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

55—

அரசு உயர்நிலைப் பள்ளி அமைத்தல்

*70769—திரு. வி.பி.ஆர். ரமேஷ்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முத்தையாபுரத்தில் அரசினர் உயர்நிலைப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வி.பி.ஆர். ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தையாபுரம், ஸ்பிக் போன்ற பல தொழிற்சாலைகள் உள்ள இடம்.